Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் ~ 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | வைகாசி - 01 | 15-05-2003 | வியாழக்கிழமை | ஓசை 86

வவுனியா ஒப்டிக்கல்
Vavuniya Optical
கண் பரிசோதிக்கப்பட்டு மூக்குக் கண்ணாடி 1/2 மணித்தியாலத்தில் பெற்றுக் கொள்ளலாம். உங்கள் வைத்திய துண்டுகளுக்கும் உடன் கண்ணாடி வழங்கப்படும்.
வவுனியா ஒப்டிக்கல்,
30 பஸ் நிலையம்,
வவுனியா. (சி-7864)

# நோர்வே வெளிவிவகார அமைச்சர் பீற்றசன் தலைவர் பிரபாகரனை இன்று சந்திப்பார்!

## சமாதானப் பேச்சுக்களில் தோன்றியுள்ள முட்டுக்கட்டைகள் குறித்து பேசப்படலாம்

(கிளிநொச்சி)

**தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்களுக்கும், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றசனுக்கும் இடையிலான சந்திப்பொன்று இன்று காலை கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளது. இச்சந்திப்பில் சமாதானப் பேச்சுக்களில் தோன்றியுள்ள முட்டுக்கட்டை பற்றி விவாதிக்கப்படலாம் என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.**

இன்று காலை 9.00 மணிக்கு கொழும்பிலிருந்து சிறிலங்கா விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை வந்தடையும் நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றசன் தலைமையிலான நோர்வேக் குழுவில் அந்நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சரும், சிறிலங்கா அரசிற்கும்-புலிகளுக்கும் இடையிலான சமாதானமுயற்சிகளைத் தலைமைதாங்கி நடத்திவருபவருமான விதார் கெல்ஹேஹசன், அரசியல் ஆலோசகர் மாறிற்பேகீர், பேச்சாளர்

(08ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே வெளிவிவகார அமைச்சர் பிரதமர் ரணில் நேற்றுச் சந்திப்பு!

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்ற சன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இதற்கு முன்பாக நோர்வே வெளியுறவு அமைச்சர் ஜோன் பீற்ற சன் உட்பட நோர்வே விசேட பிரதிநிதிகள் குழு நேற்று கொழும்பு வந்தடைந்தது.

இக்குழுவில் நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் கெல்ஹேஹசனும் இடம்பெற்றிருந்தார்.

ஜோன் பீற்ற சன் பிரதம மந்திரி ரணிலை நேற்று அலரிமாளிகையில் சந்தித்துள்ளார். ரணில் தற்போதைய சமாதான நடவடிக்கைகள் தொடர்பாகவும் யூன் மாதம் இடம்பெறவுள்ள டோக்கியோ உதவி வழங்கும் மாநாடு தொடர்பாகவும் கலந்துரையாடியுள்ளார்.

## சமாதானப் பேச்சுவார்த்தை இடைநிறுத்தத்தைவிட

# சனாதிபதி - பிரதமர் சர்ச்சையில் கூடிய கவனம் தேவையாகவுள்ளது!

### அமெ. பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருப்பதை விட சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்பட்டுள்ள சர்ச்சைகுறித்தே கூடிய கவனம் செலுத்தவேண்டியுள்ளது என தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதி ராஜாங்க செயலர் கிறிஸ்ரினா றொக்கா தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள அமெரிக்க நிலையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் அரசுக்கும் சனாதிபதிக்கும் இடையிலான தற்போதைய அரசியல் நெருக்கடி சமாதான முன்னெடுப்புக்களை எவ்வகையி

(08ஆம் பக்கம் பார்க்க)

## மனைவியை வெட்டிக்கொன்ற நபருக்கு 20 வருடச் சிறை

### முல்லை. மேல்நீதிமன்று தீர்ப்பு

மனைவியைக் கத்தியால் வெட்டி... கண்டனமாக விதிக்கப்பட்ட தீர்ப்பு

படுகொலை செய்த நபருக்கு முல்லைத்தீவு மேல்நீதிமன்றினால் 20 வருடச் சிறைத்தண்டனையும் 50 ஆயிரம் ரூபா குற்றப் பணமும் விதிக்கப்பட்டது.

2002ஆம் ஆண்டில் முள்ளியவளையில் இடம்பெற்ற இக்கொலை தொட

(08ஆம் பக்கம் பார்க்க)

## வர்த்தமானி அச்சிடுவது குறித்து சட்டமா அதிபர் ஆலோசனை எதிர்பார்ப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை சனாதிபதி பொறுப்பேற்றது தொடர்பான பிரகடன வர்த்தமானியை அச்சிடுவது குறித்து சட்டமா அதிபரின் ஆலோசனையை எதிர்பார்த்திருப்பதாக சிறிலங்காவின் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார். மேற்படி வர்த்தமானியை அச்சிடுமாறு சனாதிபதி

(08ஆம் பக்கம் பார்க்க)

## தாய்லாந்துப் பிரதமரின் விஜயம் இடைநிறுத்தம்

தாய்லாந்துப் பிரதமர் சிறிலங்காவிற்கான தனது விஜயத்தைப் பிற்போட்டுள்ளார்.

தாய்லாந்துப் பிரதமருடன் அந்நாட்டின் வெளிநாட்டு அமைச்சர், வர்த்தக அமைச்சர், அரச அதிகாரிகள், வர்த்தகப் பிரமுகர்கள் ஆகியோரும் இலங்கைக்கு இரு நாள் விஜயத்தை மேற்கொள்ளவிருந்தனர். இவர்களது பயணம் இறுதி நேரத்தில் ரத்துச் செய்யப்பட்டதாகத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்ஸ்' பரவுதலைத் தடுப்பதற்கான அறிவுறுத்தல்களைக் கடைப்பிடிக்குக!

### தமிழீழ சுகாதார சேவையினர் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

'சார்ஸ்' நோய் பரவுதலைத் தடுக்கும் நோக்கில், தம்மைப் பாதுகாக்கும் சுகாதார நடைமுறைகள் தொடர்பாக அறியத் தந்தவாறு கைக்கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவைகள் தொற்று நோய்த்தடுப்புப் பிரிவினர் விடுத்த செய்திக்குறிப்பில் கேட்டுக் கொண்டுள்ளனர்.

'சார்ஸ்' தொற்று நியுமோனியாவிற்கான அறிகுறியுடன் நோயாளி இறப்பு என்ற தலைப்பினை இச்செய்திக் குறிப்பில் யாழ். பாவட்டம் நுணாவிலைச் சேர்ந்த 27 வயதுடையவன் 'சார்ஸ்' நோயின் அறிகுறிகளான காய்ச்சல், இருமல் என்பன கடந்த 9 ஆம் திகதி ஏற்பட்ட நிலையில் 12 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு 14 ஆம் திகதி அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பயனளிக்காத நிலையில் இறந்துள்ளார்.

இந் நோயாளிக்கு நோய் ஏற்படுவதற்குச் சில நாட்களுக்கு முன்னர், அவுஸ்திரேலியா, கனடா,

(08ஆம் பக்கம் பார்க்க)

## 'சார்ஸ்' அறிகுறியுடைய நோயாளி யாழ். மருத்துவமனையில் மரணம்!

(யாழ்ப்பாணம்)

'சார்ஸ்' நோய்க்குரிய அறிகுறிகளுடன் யாழ். போதனா வைத்தியசாலையில் இரு தினங்களுக்கு முன்னர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பெண் ஒருவர் நேற்று மரணமானார். சாவகச்சேரியைச் சேர்ந்த மாணிக்கவாசகம் யமுனா என்ற பெண்மணியே உயிரிழந்தவராவார்.

மேலும், சார்ஸ் நோய்தானா என்று உறுதி செய்யப்படாத நிலை

(08ஆம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலைக் குறிவைத்து கிராமிய மட்டத்தில் பிரச்சாரம்!

ஐ.தே.முன்னணியும், பொ.ஐ.முன்னணியும் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைகளினை கிராம மட்டத்தில் இருந்து ஆரம்பித்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இதன்பிரகாரம் கட்சிகளின் தலைவர்கள் உள்ளூர் தலைவர்களுக்கு அரசியல் நிலைமைகளை விளக்கி வருவதோடு, கருத்தரங்குகளையும் நடத்திவருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

ஐ.தே.கட்சியின் தலைவர் ரனில் விக்கிரமசிங்க தமது கட்சியின் அனைத்துக் கிளைகளுக்கும் விளக்

(08ஆம் பக்கம் பார்க்க)

### த.போ.வ.பதிவுப் பகுதியின் அறிவுறுத்தல்

தமிழீழ அடையாள இலக்கத்தகடு 2003 ஸ்ரிக்கர் இன்றி ஊர்திகளை வீதிப் பாவனைக்குப் பயன்படுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என தமிழீழ போக்குவரத்துப் பதிவுப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

## அரசு - புலிகள் மீதான குற்றச்சாட்டு அறிக்கை!

### கிறிஸ்ரினா றொக்காவிடம் சந்திரிகா கையளிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா அரசு மீதும் விடுதலைப்புலிகள் மீதும் சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பல்வேறு குற்றச்சாட்டுக்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதி ராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா றொக்காவிடம் கையளித்துள்ளார்.

இந்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறிவிட்டதாகக் குற்றம் காட்டப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியல் எதிரிகள், படைத்துறை சார்ந்த உளவாளிகளின் கொலைகள், பணம் பறிப்பு, சிறுவர் திரட்டல், எல்லை மீறல்கள் என்று பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களை இந்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் மீது சனாதிபதி சுமத்தியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விடுதலைப் புலிகள் வன்முறையையும் தனிநாட்டுக் கோரிக்கையையும் கைவிட வேண்டும் என்பதிலும் மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சியைக் கௌரவப்படுத்த வேண்டும் என்பதிலும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான, தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களை குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள்.

ஒருங்கிணைந்த மாதிரிப்பண்ணை, வட்டக்கச்சி. (3255)


# முல்லை. மாவட்டத்தில் நான்கு கிராமங்களில் மீளக் குடியேறுதல் குறித்த கலந்துரையாடல்!

## கிராமங்களுக்கு 9 பேர் கொண்ட குழுக்கள் நியமனம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீள் குடியமராத கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், கருநாட்டுக்கேணி, தென்னமரவாடி ஆகிய நான்கு கிராமங்களிலும் மீள்குடியமர்வு தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

நீராவிப்பிட்டியில் அமைந்துள்ள கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலையில் கடற்புலிகளின் முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ரங்கன் தலைமையில் இக் கலந்துரையாடல் இடம் பெற்றது. மேற்படி கலந்துரையாடலில் துறைசார் பொறுப்பாளர்கள், கிராம அலுவலர்கள், கிராமங்களின் மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். ஒவ்வொரு கிராமத்துக்கும் 9 பேர் கொண்ட குழு தெரிவுசெய்யப்பட்டது. கொக்குத்தொடுவாய் கிராமத்துக்கு க.பாலசிவராசாவும், கொக்கிளாய் கிராமத்துக்கு வீ. ரத்தினசிங்கமும், தென்னமரவாடிக்கு க.அமிர்தலிங்கமும், கருநாட்டுக்கேணிக்கு சு.இரத்தினமும் தலைவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தக் குழுக்கள் ஊடாக மக்களின் தேவைகள், உதவிகள் என்பன இனங்காணப்பட்டு முன்னெடுக்கப்படவுள்ளன. (20)

# வீதி சீரின்மையால் மக்கள் அவதி

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பில் கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களில் பெய்த மழையினால் வீதிப் போக்குவரத்தில் மக்கள் பெரும் கஷ்டத்தினை அனுபவிக்க வேண்டியுள்ளது. வீதியிலுள்ள குழிகளில் நீர் நிறைந்துள்ளமையே இதற்குக் காரணமாகும்.

அத்தோடு, புதுக்குடியிருப்புச் சந்தைப் பகுதிக்குச் செல்லும் பாதையிலும் நீர் தேங்கியுள்ளதினால் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர். (26)

# விவசாயிகள் கவலை!

(அலுவலக செய்தியாளர்)

கட்டாக்காலி மாடுகளின் தொல்லை காரணமாக சிறுபோக நெற்செய்கையினை மேற்கொள் பவர்கள் பெரும் கவலையடைந்துள்ளனர்.

கந்தபுரம் மரப்பாலத்திற்கு அண்மையிலுள்ள வயல்களில் சிறுபோக பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் தினம் தினம் கட்டாக்காலி மாடுகள் பயிர்களைத் துவம்சம் செய்து வருவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (சோ)

# தேராவிலில் ஆறுபேர் விபத்தில் காயம்!

தேராவில் பகுதியில் மோட்டார் சைக்கிளும் துவிச்சக்கர வண்டியும் விபத்துக்குள்ளாகியதில் ஆறு பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் தேராவில் வளைவுப் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது. துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்காகப் பயிற்சியில் ஈடுபட்டவர்கள் வீதியில் சமாந்தரமாகச் சென்று கொண்டிருந்த போது எதிரே வந்த மோட்டார் சைக்கிளுக்கு வழிவிட முற்பட்ட போதே இவ்விபத்து இடம் பெற்றது.

இவ்வாறு வழிவிட முற்பட்ட போது துவிச்சக்கர வண்டிகள் ஒன்றுடன் ஒன்று செருகுண்டு வீதியில் விழுந்தன. அப்போது எதிரே வந்த மோட்டார் சைக்கிள் இவர்கள் மீது மோதியது. இதன் போதே ஆறுபேரும் படுகாய மடைந்தனர். அத்துடன் ஐந்து துவிச்சக்கர வண்டிகளும் மோட்டார் சைக்கிளும் பலத்த சேதமடைந்தன. (19)

# கரைச்சிப் பிரதேச செ.பிரிவில் உலர் உணவு அட்டை மீளாய்வு

(அலுவலக செய்தியாளர்)

கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட உலர் உணவுபெறுபவர்களுக்கான மீளாய்வு ஒன்று நடைபெறவுள்ளது.

இந்நடவடிக்கை கிராம சேவகர் பிரிவுகள் ஊடாகவே நடைபெறும் எனத் தெரியவருகின்றது.

பாரதிபுரம், பொன்நகர், விவேகானந்தநகர்,தொண்டமான்நகர், கிருஷ்ணபுரம், செல்வாநகர், மலையாளபுரம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளில் எதிர்வரும் 16,17 ஆகிய திகதிகளிலும்,

உதயநகர் கிழக்கு, உதயநகர் மேற்கு, ஆனந்தபுரம், அம்பாள்குளம், கனகபுரம், ஜெயந்திநகர் கிராம அலுவலர் பிரிவுகளில் 18,19 ஆகிய திகதிகளிலும்,

கனகபுரம், திருநகர் வடக்கு, திருநகர் தெற்கு, பெரியபரந்தன், கிளிநொச்சி, மருதநகர் கிராமசேவகர் பிரிவுகளில் 20,21 ஆம் திகதிகளிலும்.

திருவையாறு மேற்கு, அம்பாள் நகர், திருவையாறு, இரத்தினபுரம், கனகாம்பிகைக்குளம், பன்னங்கண்டி கிராம சேவகர் பிரிவுகளில் 22,23 ஆகிய திகதிகளிலும் உலர் உணவு நிவாரண மீளாய்வு நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி கிராமசேவகர் பிரிவுகளில் குறிப்பிட்ட திகதிகளில் மீளாய்வுசெய்துகொள்ளுமாறு கரைச்சிப் பிரதேச செயலர் பொன். நித்தியானந்தன் தெரிவித்துள்ளார். (லோ)

# மக்களை அணிதிரட்ட பொ.ஐ.மு.முயல்கிறது

## எதிர்க்கட்சித் தலைவர் ராஜபக்ஷ

அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பொதுமக்களை அணிதிரட்டும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலி நகரசபையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற காலி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக்கட்சி பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. நாம் அதற்கான ஏற்பாடுகளை செய்யவேண்டும். நாம் அனைவரும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முயற்சி செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மழையினால் பாதிப்பு!

கொழும்பு உட்பட இலங்கையின் பல்வேறு இடங்களில் கடந்த சில நாட்களாகப் பெய்யும் மழையினாலும், கடும் காற்றினாலும் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதோடு உடைமைகளுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.


## தொழில்சார் விளம்பரம்

# பெருந்தெருக்கள் அமைச்சு
# வீதி அபிவிருத்தி அதிகாரசபை
# (வடமாகாணம்)

பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களை இலங்கைப்பிரஜைகளிடமிருந்து அதிகாரசபை கோருகின்றது.

01. பொறியியலாளர் (சிவில்)
    சம்பளதரம்
    தரம் :- 04
    ரூபா 8,350-16x340-13790/=

02. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்)
    சம்பளதரம்
    தரம் :- 03
    6,145-12x305-8605/=

03. வேலை மேற்பார்வையாளர்
    சம்பளதரம்
    தரம் :- 03
    5,500-15x175-8,125/=

- வயதெல்லை :-
  45 வயதுக்குட்பட்டவர்கள்.(தற்போது திணைக்களங்களில், அதிகாரசபைகளில் அரச நிறுவனங்களில் கடமையாற்றுபவர்களுக்கு வயதெல்லை விதிவிலக்காகும்.)
- சேர்த்துக்கொள்வதற்கான நிபந்தனைகள்:-
  தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் வடமாகாணத்தில் உள்ள அலுவலகங்களில் கடமையாற்றவேண்டும்.
- ஒரு வருட ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அவர்களின் ஆற்றல்களையும், நன்னடத்தைகளையும் பொறுத்தே மேலதிக நீடிப்பு வழங்கப்படும்.

சகல கல்வித்தகைமைகளையும், சேவையாற்றிய முழுவிபரங்களையும் தேவையான சகல விபரங்களுடன் அத்தாட்சிப்படுத்தக்கூடிய இருவரின் நற்சாட்சிப்பத்திரங்களுடன் விண்ணப்பங்களை பதிவுத் தபாலில், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு "பணிப்பாளர்(நிர்வாகம்), வீதி அபிவிருத்தி அதிகார சபை, செத்திரிபாய, பத்திரமுல்ல." என்னும் முகவரிக்கு 20.05.2003 அன்றோ அல்லது முன்னரோ கிடைக்குமாறு அனுப்பிவைக்க வேண்டும். அரசதிணைக்களங்களிலோ, சபைகளிலோ கடமையாற்றும் விண்ணப்ப தாரிகள் அவர்களின் தலைவர்களிற்கு ஊடாக விண்ணப்பிக்கவும்.

டி.தயானந்தா,
பொதுமுகாமையாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை.

வே.மோகன்,
பிரதான பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
முல்லைத்தீவு. (சி.8113)



# இலவச மருத்துவ முகாம்

## Dr.பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை

புதுக்குடியிருப்பு

யாழ். போதனா மருத்துவமனையில் சேவையாற்றும் மருத்துவ நிபுணர்களும் எமது மருத்துவ மனையும் இணைந்து எதிர்வரும் சனிக்கிழமை (17.05.2003) காலை 9.00 முதல் மாலை 2.00 மணிவரை இலவச மருத்துவ சேவைகளை வழங்கவுள்ளோம்.

வழங்கப்படவிருக்கும் சேவைகள்

- சத்திர சிகிச்சை
- பொது மருத்துவம்
- காது, மூக்கு, தொண்டை சத்திர சிகிச்சை
- பெண் ஆரோக்கியம், மகப்பேற்று மருத்துவம்
- கண் சிகிச்சை

பயன்பெற விரும்புவோர் உரிய நேரத்தில் புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள எமது Dr.பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவ மனையின் வெளிநோயாளர் பிரிவிற்கு சமூகம் தரவும்.

நிர்வாகம்:
Dr. பொன்னம்பலம் ஞாபகார்த்த மருத்துவமனை,
புதுக்குடியிருப்பு. (சி.8114)


# 03ஆம் ஆண்டு நினைவில்

பிறப்பு 05 12 1962



இறப்பு 18 05 2000

திதி: 15-05-2003

## அமரர் திருமதி நிர்மலாதேவி சிவகுமார்

கச்சார்வெளி பன்னிரு தியாகிகள் பாலர் பாடசாலை ஆசிரியை
கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை ஆசிரியை.

"காலங்கள் மாறினாலும்
பாசங்கள் மாறாது"

என்றும் நினைவுடன்
அன்பு மகள் தர்சா,
அன்புத்தாய் பவளம்மா, சகோதரர்கள்

இத்தாவில், பளை. (3262) இல:23 திருநகர், கிளிநொச்சி.

# ஈராக்கில் பாரிய மனித புதைகுழி கண்டுபிடிப்பு!

# பத்தாயிரத்துக்கு மேல் சடலங்கள் இருப்பதாக ஊகம்!!

## - இதுவரை பெருமளவு சடலங்கள் மீட்பு

**ஈராக்கில் ஆயிரக்கணக்கான மனித சடலங்களை கொண்ட பாரிய புதைகுழியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து பெருமளவான சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதோடு தொடர்ந்தும் மீட்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்படுகிறது.**

சதாம் ஹுசைனின் ஆட்சிக் காலத்தில் 10.000 பேரைக் கொன்று ஒரே இடத்தில் புதைக்கப்பட்டமை தெரியவந்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அங்கு தோண்டத் தோண்ட சடலங்கள் கிடைத்துக் கொண்டிருப்பதாக அவர்கள் மேலும் கூறியுள்ளார்கள்.

ஈராக்கில் சதாம் ஹுசைனின் ஆட்சி வீழ்ந்து விட்ட நிலையில் பல முக்கிய தலைவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றார்கள் .

இவர்களில் சதாம் ஹுசைனின் 'பாத்' கட்சியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கொடுத்த தகவலின் படியே. "மஹராலின" எனும் பகுதியில் ஆயிரக்கணக்கான சடலங்கள் ஒரே இடத்தில் புதைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருப்பதாக அமெரிக்கப் படையினர் கூறியுள்ளனர்.

இந்த இடத்தில் இது வரை 4000க்கும் அதிகமான சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

சதாம் ஹுசைனின் ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சி செய்த குர்திஷ் இன மக்களின் சடலங்களாக இவை இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகின்றது.

அங்கு மேலும் 7000 பேர் புதைக்கப்பட்டிருக்கக்கூடும் என நம்பப்படுவதால் சடலங்களைத் தோண்டும் பணி தீவிரமாக நடந்து வருவதாக அமெரிக்கப் படையினர் கூறியுள்ளனர்.

கடந்த 10 ஆண்டுகளாக காணாமல்போன தங்கள் உறவினர்களின் சடலமும் அங்கு புதைக்கப்பட்டிருக்கக்கூடும் எனும் எதிர்பார்ப்பில் ஈராக் மக்கள் அப்பகுதியில் துயரத்துடன் காத்திருக்கின்றனர்.


## நடமாடும் தேவாலயம் இங்கிலாந்தில் அறிமுகம்!

இங்கிலாந்தில் இறைபக்தி மிக்க கிறிஸ்தவர் ஒருவர் உருவாக்கியுள்ள உடனடித் தேவாலயம் அங்குள்ள கிறிஸ்தவர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது.

வானுயர ஓங்கி நிற்கும் கோபுரங்களுடன் திகழும் தேவாலயங்களில் பிரார்த்தனை செய்யும் கிறிஸ்தவர்களிடையே, மக்கள் கூடும் இடங்களில் திடீர் பிரார்த்தனையில் ஈடுபடும் ஒரு பிரிவினரும் உள்ளனர்.

இந்த வகையில் இங்கிலாந்தைச் சேர்ந்த "மைக்கின்கில்" என்பவர் ஆயத்த தேவாலயம் ஒன்றை உருவாக்கியுள்ளார்.

பொலித்தீனில் உருவாக்கியிருக்கும் இத்தேவாலயத்தை கையடக்கமாக ஒரு குருவானவர் எடுத்துச் சென்று பூங்கா போன்ற பொது இடங்களில் பிரார்த்தனையில் ஈடுபட முடியும்.



ஜெருசலேமுக்கு அருகே புதிதாகக் கட்டப்படும் கட்டடமொன்றின் முன்னால் பறக்கும் இஸ்ரேலியக் கொடி.

## ஐ.நா. கவனத்தை திருப்பும் பாக்கிஸ்தான்; 300 இந்தியர்களை விடுவிக்கவும் முடிவு!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் பல்வேறு சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்கள் உள்ளிட்ட இந்தியர்கள் 300 பேரை விடுதலை செய்ய பாகிஸ்தானிய அரசு முடிவு செய்துள்ளது.

இந்திய-பாகிஸ்தானிடையேயான விரிசலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தியாவுடனான அமைதி நடவடிக்கைக்கு ஐ.நா. சபை உதவி வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் நேற்று முன்தினம் உரையாற்றிய பாகிஸ்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு குஷ்சித் முகம்மது ஹசூரி இந்தியா-பாகிஸ்தானிடையே பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலை உருவாகி இருப்பதாகக் கூறியுள்ளார்.

## ஆயிரக்கணக்கான சோமாலிய அகதிகள் அமெரிக்கா நோக்கி படையெடுப்பு!

சோமாலியாவைச் சேர்ந்த சுமார் 10,000 அகதிகள் மறுவாழ்விற்காக அமெரிக்காவை நோக்கிப் பயணத்தைத் தொடங்கியுள்ளனர்.

ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள பெரும்பாலான நாடுகளில் நடைபெறும் உள்நாட்டுப் போரால் வறுமை தலைவிரித்து ஆடுகின்றது.


இதனால் சோமாலியா நாட்டைச் சேர்ந்த 10,000க்கும் அதிகமானோர் அண்டை நாடான கென்யாவில் கடந்த 10 வருடங்களாக அகதிகளாக தங்கியிருந்தனர்.

அவர்கள் அனைவரும் அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்தற்கிணங்க அந்நாட்டில் அவர்களுக்கு மறுவாழ்வளிக்க அமெரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

அதற்கான பணிகள் நடைபெற்று வரும் நிலையில் 74 பேர் கொண்ட முதலாவது குழு அமெரிக்காவுக்கு புறப்பட்டுள்ளது.

எஞ்சியவர்களும் அமெரிக்காவுக்குச் செல்லத் தயாராக உள்ளார்கள்.

1991ஆம் ஆண்டு சோமாலியா அதிபர் செயல் ஹரி பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்டமையை அடுத்து இன்றுவரை அந்நாட்டின் அரசு செயற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



தென் பிலிப்பைன் சின் கொரோடைல் பகுதியில் கடந்த சனிக் கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப் பொன்றின் கோரம்.

## தவறாகக் கையாளும் பொடோவை மத்திய அரசு மீளப் பெறவேண்டும்

### —தி.மு.க. மீண்டும் வற்புறுத்து

பொடோ சட்டத்தை மத்திய அரசு திரும்பப் பெற வேண்டும் என்று தி.மு.க. தலைவர் கருணாநிதி திரும்பவும் வலியுறுத்தியுள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் பத்திரிகை சுதந்திரம் பாதுகாப்பு குழு சார்பில் நடைபெற்ற கண்டனப் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய அவர்,

பயங்கரவாதிகளை அடக்க இந்தச் சட்டம் தேவை என்று கூறிய நேரத்தில் வேறுவழியில்லாமல் ஒத்துக்கொள்ள நேரிட்டது.

ஆனால், இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படுவதால், இந்தச் சட்டமே வேண்டாம் எனும் நிலைக்குத் தாம் வந்து விட்டதாகவும் கூறியுள்ளார்.

பிரதமர், துணைப் பிரதமர் அளித்த உத்தரவாதத்திற்கு மாறாக இந்தச் சட்டம் தமிழகத்தில் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

இக் கூட்டத்தில் பேசிய பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் ராமதாஸ் பத்திரிகை சுதந்திரத்திற்காக தமது கட்சி போராடும் என்றும், நக்கீரன் ஆசிரியர் கோபால் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும், கூறியுள்ளார்.

தமிழ் நாடு காங்கிரஸ்.ம.தி.மு.க, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மாக்ஸியக் கட்சி, ஆகிய கட்சியைச் சேர்ந்தவர்களும் உரையாற்றியுள்ளனர்.

## தூதுவர் நியமனம்

கடந்த 17 மாதங்களின் பின்னர், பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதுவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது சீனாவின் தூதுவராகப் பணியாற்றி வரும் சிவசங்கர் மேனனை பாகிஸ்தானுக்கான புதிய தூதராக மத்திய அரசு நியமித்துள்ளது.

## இஸ்லாமிய தீவிரவாத அச்சுறுத்தலை ஜேர்மன் எதிர்நோக்குகின்றது!

### — புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

இஸ்லாமிய தீவிரவாதக் குழுக்களிடமிருந்து தமது நாடு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை எதிர்நோக்குவதாக ஜேர்மன் தெரிவித்துள்ளது.

பயங்கரவாதத்திற்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையில் இவ் அச்சுறுத்தல் தொடர்ந்தும் இருப்பதாக ஜேர்மனின் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலங்களில் அல்கைதா உட்பட மற்றும் பல தீவிரவாதக் குழுக்களிடமிருந்து ஜேர்மன் உட்பட மேற்குலக நாடுகள் அச்சுறுத்தலை எதிர்நோக்கி வந்துள்ளதாக புலனாய்வுப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை தீவிரவாதிகளையும், பயங்கரவாதிகளையும் கைது செய்யும் நடவடிக்கைகளுக்கு தமது நாடு முன்னுரிமை அளிப்பதாக ஜேர்மனியின் உள்துறை அமைச்சர் கூறியுள்ளார். தேசிய மற்றும் சர்வதேச புலனாய்வு பிரிவினரின் நடவடிக்கையைத் தொடர்ந்து பயங்கரவாத வலைப்பின்னல் தலைமை தாங்கிய போதிலும், சர்வதேச பயங்கரவாதிகளிடமிருந்து தொடர்ந்து அச்சுறுத்தல் ஏற்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## தூதரகம் மூடப்பட்டது!

(வாஷிங்டன்)

சவூதி அரேபியாவிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை அங்கிருந்து வெளியேறுமாறு அமெரிக்கா உத்தரவிட்டுள்ளது.

மேலும் இந்தக் குண்டு வெடிப்பு பற்றி விசாரணை நடத்துவதற்காக அமெரிக்க புலனாய்வுப் பிரிவு எஸ்.பி.ஐ. அதிகாரிகளை அனுப்பியுள்ளது.

# சமாதானக் காற்றை சுவாசித்திடும் இந்திய - பாகிஸ்தான்...?

இந்திய உபகண்டத்தில் போர் மேகம் கருக்கொள்வதும், பின்னர் அது சமாதானக் காற்றினால் கொஞ்சம் கொஞ்சமாக கலைந்து போவதும் மீண்டும் போர் மேகம் சூழ்வதும் தான்... இதுவரை நடந்து வந்த ஒரு விடயம்.

இதற்கு மாறாக இந்திய - பாகிஸ்தான் தற்போது நிரந்தர சமாதானத்தை நோக்கி மெல்ல மெல்ல நடைபோடுகின்றது.

இதுவரை சாண் ஏற முழம் சறுக்கலும், சறுக்கலில் வடுக்களுமே ஏற்பட்டது.

இவற்றைத் தாண்டி தற்போது சமாதானத்தை நோக்கி இரு நாடுகளும் போட்டா போட்டி போட்டுக் கொண்டு முன்னேறுகின்றன என்றால் மிகையாகாது.

இதனால் தான் அண்மையில் லாகூர் சென்ற இந்தியப் பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தானுடன் நேசக்கரத்தை நீட்டியிருந்தார்.

திடீரென வாஜ்பாயின் நேசக்கரம் நீண்டமை, பாகிஸ்தானை திக்குமுக்காட வைத்தது என்றால், உலக நாடுகளை வியப்பில் ஆழ்த்தியது.

ஏனெனில் இதுவரை இந்திய - பாகிஸ்தான் சமாதானப் பேச்சுக்கள் இரண்டு முறை நடைபெற்ற போதும், இரண்டு முறையும் வாஜ்பாய்தான், பாகிஸ்தானின் பூட்டிய கதவைத் தட்டி திறந்துள்ளார். பூட்டிய கதவை மூன்றாவது முறையாகவும் வாஜ்பாய்தான் தற்போதும் தட்டத் தொடங்கியுள்ளார்.

அதுமட்டுமன்றி, தனது லாகூர் பயணம் பற்றி அறிக்கை சமர்ப்பித்த வாஜ்பாய், எத்தனை காலம் தான் இருநாடுகளும் சண்டையைத் தொடர்வது என்று நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் விமானம், ரயில், பஸ் போக்குவரத்து சேவைகளை ஆரம்பிக்க உள்ளதுடன், பாகிஸ்தானுக்கான இந்தியத் தூதரையும் நியமிக்க உள்ளதாகவும், இதுவரை தொடர்ந்திருந்த இரத்த ஆற்று ஓட்டத்திற்கு முடிவு கட்ட வேண்டும் என உறுதிபடக் கூறியுள்ளார்.

1999இல் பிரதமராக பதவியேற்ற கையுடன், வாஜ்பாய் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பஸ் பயணத்தை லாகூருக்கு மேற்கொண்டார்.



பாகிஸ்தானின் முன்னைய பிரதமர் நவாஸ் ஷரீப்

இதனால் இறுக மூடியிருந்த இந்திய - பாகிஸ்தான் கதவினை அவரே முதலில் திறந்து வைத்தார். அப்போது பாகிஸ்தான் பிரதமராக இருந்த நவாஸ் ஷெரீப்புடன் நட்புக் கரத்தை நீட்டி சமாதானத்தை வரவேற்கக் காத்திருந்தார்.

ஆனால், போதாத காலம் போல் இந்த நிகழ்வு நடந்து சிறிது காலத்தில் மீண்டும் சமாதானக் கதவு அடைக்கப்பட்டது.

ஏனெனில், காஷ்மீர் விவகாரம் சமாதானத்தின் எதிர் பதமாய் அமைந்து விடுவதுதான் காரணமாயிற்று.

இதனையடுத்து கார்கில் போர் உருவாகிற்று. இந்த போர் தொடராய் நான்கு மாதங்களை தன்னுள்ளே இழுத்துக் கொண்டதுடன், ஆயிரக்கணக்கில் இருதரப்பிலும் உயிர்களையும் பலி கொண்டது.

இதனால் லாகூரில் பேசப்பட்ட விடயங்கள் அனைத்தும் விழலுக்கு இறைத்த நீராயிற்று. வாஜ்பாயின் முதல் சமாதான பயணம் எந்தவித நன்மையையும் பெற்றுக் கொடுக்காத பயணமாயிற்று.

இந்திய - பாகிஸ்தானிடையே மீண்டும் முகம் பார்க்காது திருப்பிக் கொள்ளும் நிலை உருவாயிற்று.

இதனையடுத்து பாகிஸ்தானில் நவாஸ் ஷரிபை பதவியிலிருந்து இறக்கி, நாடு கடத்திவிட்டு, இராணுவப் புரட்சி மூலம் "பர்வேஸ் முஷாரப்" ஆட்சிப்பீடம் ஏறினார்.

நீண்டகாலமாக நிலவிய மௌனத்தை மீண்டும் வாஜ்பாய் தான் கலைத்தார். இந்தியாவுக்கு வருமாறு முஷாரப்புக்கு அழைப்பு விடுத்தார்.

உலகப் புகழ்பெற்ற தாஜ்மகால் கட்டப்பட்டுள்ள ஆக்ராவில் இருவரும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தினர்.

ஆனால் இறுதிகட்டத்தில், தீர்மானம் எடுக்கும் விடயத்தின் பிரகடனத்தில் முரண்பாடு ஏற்பட்டமையினால், முஷாரப் மேசைப் பேச்சுக்களுடன் மட்டும் திரும்பும் நிலை உருவானது அன்று.

இதனால் பிரதமர் வாஜ்பாயின் சமாதான முயற்சி கட்சிகளிடையே விமர்சனத்துக்கு உள்ளானதுடன், தீவிரவாதிகளால் அச்சுறுத்தலும் உருவானது என்று கூறப்படுகின்றது.

2001 டிசம்பர் 12ஆம் திகதி டில்லிப் பாராளுமன்றம் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டது.

இதனால், பாகிஸ்தான் எல்லை கடந்த பயங்கரவாதத்தை ஊக்குவித்து, இந்தியாவினுள் ஊடுருவ பக்கபலமாயிற்று என்று இந்தியா மிகவும் பலமாகக் குற்றம் சாட்டியுள்ளது. கார்கில் போர் மூலம் நூலிடையிலிருந்த உறவுகளும் அறுந்து கொண்டது. இரு நாடுகளுக்கிடையிலும் முறுகல் வலுத்தது. போர் மேகம் சூழலாயிற்று.

இந்தியப் பாராளுமன்றம் தாக்கப்பட்டு ஒருவார காலப்பகுதியில், இந்தியா காஷ்மீர் எல்லையில் படைகளைக் குவித்தது. அதே போல், பாகிஸ்தானும் தனது பங்கிற்கு எல்லையை நோக்கி விரைந்தது.

அணுவாயுதம் கொண்டுள்ள இரு நாடுகளும் எல்லையில் பாரியளவில் படை குவிப்பதை திகிலுடன் உலக நாடுகள் பார்த்தன. மற்றொரு அணுவாயுதப் போரா... என அஞ்சின.

இதனைப் பார்த்த அமெரிக்கா தலையிட்டு அணுவாயுதப் போரின் விளிம்பிலிருந்த இரு நாடுகளையும் சுமூக நிலைக்குக் கொண்டு வந்தது.

இரு நாடுகளுக்கிடையிலும் விமானம், ரயில், பஸ் போக்குவரத்துக்கள் அனைத்தையும் இருநாடுகளும் முடக்கிக் கொண்டது.

உறவுப்பாலம் அமைக்கக் கூடிய விளையாட்டுக்கு கூட இருநாடும் அனுமதியை மறுத்தன.

இந்த நிலையில் தான் தற்போது மீண்டும் வாஜ்பாய் சமாதானத்தை ஏற்படுத்த பாகிஸ்தானுடன் நேசக்கரத்தை நீட்டியுள்ளார்.

இதற்கு நல்ல விதமாக பாகிஸ்தான் பிரதமர் ஜமாலியும், வாஜ்பாயுடன் தொலைபேசி உரையாடலை மேற்கொண்டுள்ளதுடன், போக்குவரத்து சேவையை தொடரவுள்ளதாகவும் பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

அத்துடன் பிரதமர் வாஜ்பாயை, பாகிஸ்தானுக்கு வருமாறும் அழைப்பு விடுத்துள்ளார். இரு நாடுகளுக்கிடையில் மீண்டும் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற வேண்டும் என்றும், தடுத்து வைக்கப்பட்ட இந்தியர்களை நல்லெண்ண அடிப்படையில் விடுவிக்கவுள்ளதாகவும் அறிவித்துள்ளார்.

அதேநேரம் சமாதானத்தை வரவேற்கின்றோம். ஆனால் காஷ்மீர் விவகாரம் பேசப்படாமல் விடக்கூடாது என்றும், அவ்விடத்தின் நிலைப்பாட்டில் பாகிஸ்தான் மாறிவிடக்கூடாது என்றும் பாகிஸ்தானில், இஸ்லாமியக் கட்சி முதல் ஏனைய கட்சிகளும் வலியுறுத்திக் கூறியுள்ளன.

சர்ச்சைக்குரிய காஷ்மீர்தான் இருநாடுகளின் சமாதானத்தையும் கேள்விக் குறியாக்கி விடுவதாக அரசியல் அவதானிகள் கவலை அடைகின்றனர்.

1947இல் இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திரத்தை அடுத்துப் பிரியும் போது, காஷ்மீர் இந்தியாவுடன்தான் இணைக்கப்பட்டது.

ஏனெனில் காஷ்மீரை இந்துமன்னர் ஆண்டு வந்தமையினால் இந்தியா,பாகிஸ்தான் பிரியும் போது, அதிக முஸ்லிம்கள் வாழும் காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டுவிட்டது.

இதனால் தான் காஷ்மீர் மக்கள் மத்தியில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென 1948இல் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



ஆக்ராவில் ஜனாதிபதி முஷாரப், இந்தியப் பிரதமர் வாஜ்பாய்

இவ்வாறு வாக்கெடுப்பு நடத்துவதால் தான் காஷ்மீர் மக்கள் இந்தியாவுடனா... பாகிஸ்தானுடனா... இணைய விரும்புகின்றார்கள் என்பது தெரிய வந்துவிடும் என்பது உண்மை நிலை.

ஆனால் இதுவரை காலமும் இந்தியா அப்படி ஒரு வாக்கெடுப்பை [illegible] பேச்சுக்களில் வலியுறுத்தவுமில்லை என்று கூறப்படுகின்றது.

இதனால்தான் முதல் இரண்டு தடவைகளும் பேச்சுவார்த்தைகள் சிதறிப் போகக் காரணமாயிற்று.

தற்போது, புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கின்றது. இதற்குக் காரணமும் இல்லாமலில்லை. ஈராக் போர் உலக நாடுகளைப் புதிய வழியில் சிந்திக்கத் தூண்டியுள்ளது எனலாம்.

ஈராக்கிற்கு ஏற்பட்ட நிலை இந்திய-பாகிஸ்தானுக்கு ஏற்படாது என்று என்ன நிச்சயம் இருக்க முடியும்...?

ஏற்கனவே, அமெரிக்கா எல்லை தாண்டிய பயங்கரவாதத்தைப் பாகிஸ்தான் தூண்டியும் அதிகரித்தும் வருவதாக அறிக்கை வெளியிட்டுள்ளதுடன்,பாகிஸ்தானின் நடவடிக்கைகளை அவதானித்து நாடாளுமன்றத்திற்குத் தெரியப்படுத்துமாறு அமெரிக்க அதிபர் புஷ் கூறியுள்ளார்.

எனவே காஷ்மீரை அமெரிக்கா கைப்பற்ற நினைத்தால்....... அது இந்தியாவுக்கும் தலைவலி. பாகிஸ்தானுக்கும் பெரிய உபாதை.

அ. கலைவாணி

அதனால் எல்லையில் இரு நாடும் சமாதானமாகப் போருமானால்... அமெரிக்கத் தலையீடு ஏற்படுவதைத் தடுத்துவிட முடியும் என்று இரு நாடும் முனைப்பாக தற்போது சமாதானத்தைக் கைக்கொள்ள நினைக்கின்றன.

அத்துடன் அமெரிக்க வெளிவிவகாரத் துணை இணை அமைச்சர் ரிச்சட் ஆர்மிரேச், பாகிஸ்தான் - இந்தியாவுக்குச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டார்.

இரு நாடுகளும் சமாதானத்தை நோக்கிப் பயணிப்பதை வரவேற்பதாகக் கூறிச் சென்றுள்ளார்.

இதில் ஒன்றை அவதானிக்க முடியும். இரு நாடும் சமாதானம் என்னும் வார்த்தையை உச்சரித்து முடிப்பதற்குள் ஆர்மிரேச் இரு நாடுகளுக்கும் விஜயம் மேற்கொண்டுள்ளார்.

எனவே அமெரிக்காவின் தலையீடு இல்லாமல் இந்திய-பாகிஸ்தான் உறவுகள் சீராக அமைந்துவிடப் போவதில்லை என்பதுடன், அமெரிக்காவின் திருப்திதான் இரு நாட்டினதும் சமாதானமாகக் கூட இருக்கலாம் என்றும் எதிர்பார்க்கலாம்.

ஆனால், எல்லை கடந்த பயங்கரவாதத்தைப் பாகிஸ்தான் விட்டால் மட்டுமே தான் பேச்சுக்கள் தொடர வாய்ப்புள்ளதாக இந்தியா உறுதிபடக் கூறுகின்றது.

அதேநேரம், காஷ்மீர் விடயத்தில் மாற்றம் ஏதும் கொண்டுவரக் கூடாது என்றும், பாகிஸ்தானின் நிலையிலிருந்து மாறக் கூடாது என்றும் பாகிஸ்தானிய இஸ்லாமியக் கட்சியும், ஏனைய கட்சிகளும் பிரதமர் ஜமாலியை வற்புறுத்தியுள்ளன.

இதனால் இரு நாடும் இரு வேறு விடயங்களில் வலுவாக உள்ளன. இரண்டு நாடும் தமது கருத்துக்களில் உறுதியாக நிற்பது போலவே அடுத்தவரது கருத்தையும் கவனத்தில் கொள்ளுமானால் சமாதானம் என்பது எட்டப்படும் இலக்காக மாறிவிடும்.

அதைவிட்டு இந்தியா-பாகிஸ்தான் எல்லை கடந்த பயங்கரவாதத்தைக் கைவிட வேண்டும். அதேநேரம் காஷ்மீர் விடயத்தை நான் விட்டுத்தரமாட்டேன் என்பதும், மாறாக பாகிஸ்தான் காஷ்மீரை நாம் விட்டுக்கொடுக்கத் தயாரில்லை. எல்லை கடந்த பயங்கரவாதத்தை நாம் ஊக்குவிக்கவில்லை. அதைப் பற்றிய பேச்சுக்கள் வீணானவை என்பதும், பொருத்தப்பாடுடைய கருத்துக்களாக இதுவரை காலமும் இல்லாமையினால்தான், சமாதானம் என்பது கிட்டாத ஒன்றாயிற்று இதுவரை என்கிறது அரசியல் வட்டாரம்.

எது எப்படி இருப்பினும் தற்போது தோன்றியுள்ள சமாதான முயற்சிகள் எல்லோராலும் வரவேற்கக் கூடிய ஒன்றாகவுள்ளது.

அத்துடன் இரு நாடும் திரும்பவும் போர் எனும் நிலைக்குத் தள்ளப்படுவதை இரு நாட்டு மக்களும் துளியும் விரும்பவில்லை என்பது கண்கூடு.

எல்லையில் ஏற்படும் சமாதானம், எல்லையைச் சார்ந்துள்ள மாநிலங்களில் மலர்ச்சியைத் தூவிவிடும் என்பதில் அச்சம் சிறிதுமில்லை.

எனவே, இரு நாட்டினதும் சமாதானப் பேச்சுக்கள்தான் இரு நாட்டினதும் எதிர்காலத்தை நிர்ணயிக்கப் போகின்றது என்பது உறுதி.

அதேநேரம் காஷ்மீரும், எல்லை கடந்த பயங்கரவாதமும் தான், சமாதானத்தை வலுவிழக்கச் செய்யும் சக்திகளாகவும் உள்ளன.

இவற்றில் சமநிலை ஏற்படாதவரை, சமாதானம் என்பது கேள்விக் குறியாகவும், அதற்கான முயற்சிகளின் பலன்கள் பூச்சியத்தை மட்டுமே பெற்றுக் கொடுக்கும் என்பதே தற்போதைய வெளிப்படை உண்மையாகும்.



கடற்படையால் குத்திக்குதறப்பட்ட பிஞ்சு.

# 1985-05-15 அன்று நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவான் நோக்கி குமுதினி படகில் பயணித்த மக்கள் சிறிலங்கா கடற்படையால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டமை நினைவாக.....

# குமுதினி படகு படுகொலையில் உயிர்தப்பிய இருவரின் வாக்குமூலம்

## காங்கேசு சாந்தலிங்கம்

15.05.1985 காலை 7.40 மணிக்கு குமுதினி எனும் பெயருடைய படகில் நானும் எனது மனைவி, மச்சாள், உறவினர்கள் எல்லோரும் நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவனுக்குப் பயணம் செய்வதற்கு ஆயத்தமாக இருந்தோம். ஏறக்குறைய 70-80 வரையிலான பயணிகள் அங்கிருந்தனர். குமுதினி காலை 11.10 மணிக்கு நெடுந்தீவுக்கு தம் பயணத்தை ஆரம்பித்தது. எங்கள் படகு புறப்பட்டு அரை மணித்தியால த்திற்குப் பின்பு அதாவது நயினாதீவுக்கும் நெடுந் தீவுக்குமிடையில் போய்க் கொண்டிருக்கும் போது ஒரு பிளாஸ்ரிக் படகு எமது படகை நோக்கி வந்துகொண்டிருந்தது. அந்த பிளாஸ்ரிக் படகு எமது படகை அண்மித்த போது அதிலிருந்தவர்கள் கொச்சைத்தமிழில் எமது படகின் எஞ்ஜினை நிறுத்தும்படி கட்டளையிட்டார்கள். அவர்கள் கட்டளையிட்டதன்படி எமது படகோட்டிகள் உடனே எஞ்சினை நிறுத்தினார்கள். பிளாஸ்ரிக் படகில் இருந்தவர்கள் எமது படகைச் சுற்றி வந்து எமது படகை தங்கள் படகுடன் இணைத்தார்கள். அந்தப்படகில் ஏறக்குறைய 7-8 பேர் இருந்தார்கள். அவர்களில் சிலர் கட்டை காற்சட்டையும் ரீசேட்டும் அணிந்திருந்தார்கள். வேறு சிலர் நீளக் காற்சட்டையும் சாதாரண சேட்டும் அணிந் திருந் தார்கள். இன்னும் சிலர் நீளக் காற் சட் டையும் ரீசேட்டும் அணிந் திருந் தார்கள். அவர்கள் எல்லோரும் துப்பாக்கி வைத்திருந்தார்கள். அவர்கள் எஞ்ஜின் அறையில் இருந்த பட கோட்டிகளையும் பின் அறையில் இருந்தவர்களையும் மேலே ஏறி வரும்படி கூறினார்கள். அந்த நேரம் நான் படகின் கீழ் அறையில் இருந்தேன். பின்னர் அவர்கள் எல்லோரையும் முன் அறைக்குப் போகும்படி கட்டளையிட்டது எனக்குக் கேட்டது. அப்படியே பயணிகள் எல்லோரும் முன் அறைக்குச் சென்றார்கள் பிளாஸ்ரிக் படகில் வந்தவர்கள் பார்த்தார்கள். பின்பு அவர்கள் பயணிகளிடம் பெயர், விலாசம், தொழில் இடம் என்பவற்றை உரத்த சத்தமாக கத்தும்படி கட்டளையிட்டார்கள். அடையாள அட்டை சொல்லிக் கொண்டிருக்கும் போது எல்லா ஆண்களையும் ஒருவர் ஒருவருக்கு இடையே இடைவெளி விட்டவாறு எஞ்ஜின் அறையைக் கடந்து பின் அறைக்கு போகும்படி கட்டளையிட்டார்கள். பயணிகள் அவ்வாறு போய்க்கொண்டிருக்கும் போது துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டது. அந்தநேரம் நாங்கள் எங்கள் பெயர்களையும் ஏனையவற்றையும் கத்திக் கொண்டிருந்தமையால் எங்களுக்கு துப்பாக்கி வேட்டுச்சத்தம் மட்டுமே கேட்டது. வேறு எந்தச் சத்தமும் கேட்கவில்லை. அங்கு இருப்பதற்கு எனக்கு இடம் கிடைக்காத படியால் நான் அந்நேரம் நின்று கொண்டிருந்தேன். அப்போது பின் அறையிலிருந்து பயணிகள் சிலரின் உடல்கள் கடலில் விழுவதை நான் கண்டேன். அவர்கள் கட்டளையிட்ட முறைப்படி பயணிகள் போய்க்கொண்டிருந்த போது என்னுடைய முறையும் வந்தது. நான் அங்கு சென்ற போது இரத்த வெள்ளத்தில் பயணிகள் கிடந்தார்கள். இந்தக் காட்சியை பார்த்தவுடன் அதிர்ச்சியில் நான் அலறினேன். அப்போது படகில் இருந்தவர்களில் ஒருவன் எனக்கு பிரம்பால் அடித்தான். அப்போது நான் இரத்த வெள்ளத்தில் கிடந்தவர்களுக்கு மேல் விழுந்தேன். பின் அவர்கள் என்னை இழுத்து கோடரியால் வெட்டினார்கள் திரும்பவும் இழுத்து என்னை தாக்கினார்கள் நான் அவர்களை எதிர்த்தேன். அந்த நேரம் எனது காலுக்கு மேல் ஒரு புறப்புளர் காப்ற் போல் ஒரு பொருள் கிடைத்தது. அதனால் நான் இறந்தவன் போல் கிடந்தேன் பின்னர் அவர்கள் என்னை விட்டு விட்டு தொடர்ந்து மற்றவர்களை தாக்கிக் கொண்டிருந்தார்கள் தாக்கப்பட்டவர்களின் உடல்கள் எனது உடலுக்கு மேலே விழுவதை உணர்ந்தேன். எனது உடம்பின் மேற்பகுதி படகின் அடித்தளத்தில் இருக்கும் பள்ளத்தில் கிடந்தது. பின்பு எனது கால்களின் மேலும் தாக்கப்பட்டவர்களின் உடல்கள் வந்து விழுந்தது. இந்த தாக்குதல் ஏறக்குறைய 1 - 1/4 மணி நேரம் வரை நீடித்தது. நெடுந்தீவில் இருந்து என்னுடன் எனது மனைவி துசல்குமாரி, மனைவியின் சகோதரி அனுசியா, மனைவியின் சித்தி சரோஜா அவரின் குழந்தை லெஜி என்னுடன் பயணம் செய்தவர்கள் அவர்களில் எனது மனைவியும் அனுசியாவும் இறந்துவிட்டார்கள். எங்களை தாக்கியபின் படகில் வந்தவர்கள் தமது படகில் இயந்திரத்தை இயக்கிக் கொண்டு அவ்விடத்தை விட்டு நகர்ந்தார்கள். பின்பு காயப்பட்டவர்கள் சொன்னார்கள் 'வந்தவர்கள் போய்விட்டார்கள் என்று. பின்னர் எனக்கு மேலே விழுந்தவர்கள் கீழ் இருந்து எனது காலை இழுத்தெடுத்துக் கொண்டேன். எழுந்து பார்க்கும் பொழுது இறந்த ஆண், பெண், குழந்தைகள் உடல்கள் குவியலாகக் கிடப்பதைக் கண்டேன். ஒருவிதமாக நான் வெளியே வந்தேன் எங்களுடைய படகின் இயந்திரம் வேலை செய்யாததினால் எமது படகு நீரினால் புங்குடுதீவு நோக்கி இழுத்துச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தது. அப்போது எமது கையில் இருந்த சிவப்பு பாக்கை (பயணப் பை) காட்டி கரையில் இருந்தவர்களை நோக்கிக் கூப்பிட்டோம். கரையில் இருந்தவர்கள் வேறு படகு மூலம் வந்து எமது படகை இணைத்து இழுத்துக் கொண்டு குறிகட்டுவான் கரைக்குக் கொண்டு போய் சேர்த்தார்கள். பின்னர் காயப்பட்ட ஏனையவர்களோடு நானும் வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டேன். எங்களைத் தாக்கியவர்களில் ஒருவரை நான் ஏற்கனவே பார்த்திருக் கின்றேன். அவருக்கு சிறிய தாடி இருப்பதையும் கண்டேன். இந்த நபர் ஏற்கனவே நயினா தீவு கடற்படை முகாமில் அதிக காலமாக அதிகாரிகளோடு கடமையில் இருக்கும் போது கண்டிருக்கின்றேன். அவரைக் கடற்படை சீருடையுடனும் பார்த்திருக்கின்றேன். நான் அவரை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். என்னால் முடிந்த அறிக்கையை தரமுடிந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

## கணபதிப்பிள்ளை கணேசபிள்ளை

நான் உள்ளே போன போது அங்கிருந்த ஒருவன் பிரம்பால் என் தலையில் அடித்தான். பின்னர் இன்னொருவன் பிடியில்லாத கோடரியால் என் தலையில் அடித்தான். இந்தத் தாக்குதலின் பிற்பாடு நான் கீழே விழுந்தேன். நான் உள்ளே போனபோது இரத்த வெள்ளத்தில் காயங்களுடன் கிடந்த உடல்களைக் கண்டேன். அவற்றைப் பார்த்த போது நான் சத்தமிட்டேன். நான் கீழே விழுந்து கிடந்த போது பிளாஸ்ரிக் படகில் வந்த இன்னொருவன் கத்தி போன்ற ஒரு ஆயுதத்தால் என் வாயைக் கிழித்தான். எனக்கு வாயில் பெரிய காயம் உண்டானது. இந்த நிலையில் நான் உருண்டு மிதி பலகைக்குக் கீழே சென்றேன். அந்த நேரத்தில் இன்னொரு பயணி முன்னே வந்ததால் என்னை விட்டுவிட்டு அவரிடம் போனான் தொடர்ந்து. இந்தத் தாக்குதல் ஒரு மணித்தியால த்திற்கு நீடித்தது. பின்னர் பயணமான படகு எங்களை விட்டு விட்டுப் புறப்பட்டுச் சென்ற சத்தம் எனக்குக் கேட்டது.

பின்னர் நான் பார்த்த போது காயப்பட்டவர்களின் உடல்கள் துண்டங்களாகக் கிடந்தது. என்னைப் போல் சிலர் சுய அறிவுடன் இருந்தார்கள். அவர்கள் பேசுகின்ற குரல்கள் எனக்குக் கேட்டது. அவர்களுக்குள் ஒருவர் காங்கேசு சாந்தலிங்கம் பின்பு அவர் கரையில் இருந்தவர்களுக்கு சிவப்பு பாக்கைக் காட்டி வரும்படி அழைத்தார். பின்பு எமது படகு நீர் இழுத்துக் கொண்டு புங்குடுதீவை நோக்கிச் சென்றது. எமது சைகையைக் கண்டு குறிகட்டுவானில் இருந்தவர்கள் படகைக் கொண்டு வந்து எமது படகைக் குறிகட்டுவானுக்கு இழுத்துச் சென்றார்கள். அங்கிருந்து நான் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டேன். நான் வைத்தியசாலையில் இருந்துதான் அறிந்தேன் எங்களோடு வந்தவர்கள் அதே படகில் இறந்து விட்டார்கள் என்று. பிளாஸ்டிக் படகில் வந்து எம்மைத் தாக்கியவர்கள் கொச்சைத் தமிழில்ப் பேசினார்கள். அவர்கள் எமது படகைச் சுற்றிவளைத்து படகோடு இணைத்த போது தங்களுக்கிடையில் சிங்கள மொழியில் பேசிக் கொண்டார்கள். எங்களைத் தாக்கியவர்களில் இருவரை ஏற்கனவே நான் நயினாதீவு கடற்கரை கடற்படை முகாமில் அவர்களது சீருடையோடு கடமையில் இருந்ததைக் கண்டிருக்கின்றேன். சாதாரண உடையிலும் கடமையாற்றியதை கண்டிருக்கிறேன். அந்த இருவரையும் என்னால் அடையாளம் காட்ட முடியும். இவற்றை உங்களுக்குக் கூறுகிறேன் என்றார்.

# தாய்லாந்தில் மூன்று இலங்கைத் தமிழர் ஆயுதங்களுடன் பொலிஸாரால் கைது

இலங்கைத் தமிழர் மூவரைத் தாய்லாந்துப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து 13 கைத்துப் பாக்கிகள் கைப்பற்றப்பட்டதாகக் கூறிய தாய்லாந்து அதிகாரி ஒருவர் இவ் ஆயுதங்களை சிறிலங் காவுக்குத் கடத்தத் திட்டமிட்டிருக் கலாம் எனவும் கூறியுள்ளார்.

தற்போது பொலிசாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் மீது சட்ட விரோதமாக ஆயுதங்களை வைத்தி ருந்தனர் என்ற குற்றச்சாட்டை சுமத்தவுள்ளதாக தாய்லாந்துப் பொலிசார் கூறியுள்ளனர். வழக்கு விசாரணை களில் இச் சந்தேக நபர் கள குற்ற வாளிகளாக நிரூபிக்கப் பட்டால் ஒவ்வொருவருக்கும் 05 வருட சிறைத் தண்டனை விதிக்க வுள்ளதாக தாய்லாந்துப் பொலிசார் மேலும் கூறியுள்ளனர்.

# ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட வைத்தியர்கள் மீது தாக்குதல்!

கண்டியிலுள்ள மத்திய மாகாண சுகாதார அமைச்சுக்கு முன்பாகக் கடந்த திங்கட்கிழமை ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்ட அரச உதவி வைத்தியர்கள் மீது இனந் தெரியாதோர் தாக்குதல் நடத்தி யுள்ளனர்.

இந்த தாக்குதலில் 03 அரச வைத்தியர்கள் காயமடைந் துள்ளதாகக் கூறப்படுகின்றது.

கூழ்முட்டை, அழுகிய தக்கா ளிப்பழம், கற்கள் என்பவற்றி னாலேயே இவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மடுகல்லை வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்தியர் ஒருவரை மகாண சுகாதார அமைச்சர் திடீரெ ன்று இடமாற்றம் செய்தமையை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# தேர்தலொன்றை நடத்த நாம் தயாராகவுள்ளோம்

## - தேர்தல் ஆணையாளர்

(கொழும்பு)

சனாதிபதி - அரசாங்கம் ஆகிய இரு தரப்புகளுக்கிடையில் ஏற் பட்டுள்ள அரசியல் முறுகல் நிலை யினையடுத்து இனியென்ன ஏற்படலாம் என்ற நிலையில் அனை வரினது கவனமும் தேர்தல்கள் திணைக்களத்தை ஈர்த்துள்ளது.

அதேபோல் தேர்தல்கள் திணைக் களமும் உள்ளூர் உஷாரடைந் துள்ளது.

அரசியல் நிலவரம் தீவிரமாகி சில வேளை தேர்தலொன்றை நடத்த தீர்மானம் எடுக்கப்படக் கோரினால் திணைக்களம் அதற்கு தயாராக இருக்கிறது என்று தேர்தல் கள் ஆணையாளர் தயானந்த திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

# ஐ.நா. உதவித் திட்டம் இலங்கைக்கான உதவிகளை மேலும் அதிகரிக்க முடிவு

(கொழும்பு)

ஐ.நா.வின் உலக உணவுத்திட்டம் இலங்கைக்கான தனது உதவி யினை மேலும் அதிகரிக்க முடிவு செய்திருப்பதாக அறிவித்துள்ளது.

இலங்கையில் தற்போது நடை முறைப்படுத்தப்படும் புனரமைப்பு நடவடிக்கைகளில் காணப்படும் முன்னேற்றங்கள் காரணமாக இந்த அதிகரிப்பு உதவிகள் வழங்கப்பட விருப்பதாக தென் ஆசிய வலயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

முன்னர் தீர்மாணிக்கப்பட்ட 17.9 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவிக்குப் பதிலாக அதிகரித்த 22.8 மில்லியன் டொலர் நிதியுதவி கிடைக்கும் என அவர் கூறியுள்ளார்

# இலங்கை அரசியலில் தோன்றியுள்ள நிலைமை

# ஐ.நா. உணவுத் திட்டப் பணிகளைப் பாதிக்காது

## - ஆசிய பிராந்தியப் பணிப்பாளர் அறிவிப்பு

**இலங்கை அரசியலில் சனாதிபதிக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினை ஐக்கிய நாடுகள் உலக உணவுத் திட்டத்தின் எதிர்கால உள்நாட்டுத் திட்டப்பணிகளைப் பாதிக்காது என்று அதன் ஆசியப் பிராந்தியப் பணிப்பாளர் டொனி பென்பரி தெரிவித்துள்ளார்.**

ஐ.நா. உலக உணவுத் திட்டப் பணிகளைப் பார்வையிடுவதற்காக இலங்கை வந்திருக்கும் அவர் புனர்வாழ்வு மீள்குடியமர்த்துதல் மற்றும் அகதிகள் விவகார அமைச்சில் செவ்வாயன்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே இதனைக் கூறினார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் டோக்கியோ மாநாட்டிற்கு செல்வதற்கு ஐ.நா. உலக உணவுத் திட்டம் ஏற்கனவே தீர்மானித்துவிட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கல் எமது திட்டப் பணிகளை பாதிக்காதென்றே நம்புகிறோம். ஏனெனில் இந்த நிலைமை சமாதான முயற்சிகளிலும் தாக்கத்தை ஏற்படுத்தாது எனக் கருதுகிறோம்.

உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தின் போது இலங்கைக்குக் கூடுதலான அளவு உதவிகளைப் பெற்றுக்கொடுக்க நாம் ஒத்துழைப்பை வழங்குவோம். ஏற்கனவே இலங்கைக்கு என்ன வகையிலான உதவி தேவை என்பது குறித்தான பெறுமானங்களை உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்கள் தீர்மானித்திருக்கின்றன. அது போலவே ஐ.நா. உலக உணவுத் திட்டமும் டோக்கியோ மாநாட்டில் சில ஆலோசனைகளை முன்வைக்கும் என்று அவர் மேலும் கூறினார்.

## போட்டித் திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மெய்வல்லுனர் போட்டி எதிர்வரும் யூன் மாதம் 21,22.ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் இம் மாதம் 17.ஆம், 18.ஆம் திகதிகளில் இந்தப் போட்டிகள் நடைபெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தினால் இப் போட்டிகள் பிற் போடப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறையினர் அறிவித்துள்ளனர்.

## கண்ணிவெடி அகற்றல்

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் வீதியோரங்களில் உள்ள கண்ணிவெடிகளை அகற்றும் பணி கடந்த சில நாட்களாக நடைபெற்று வருகின்றது.

மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரே இந்த நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் இப்பாதையூடான போக்குவரத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

## விபத்தில் சிப்பாய் பலி!

சாவகச்சேரி பொலிஸ் நிலையம் முன் இடம்பெற்ற விபத்தில் சிக்கிப் பொலிசார் ஒருவர் பலியானார்

தம்புள்ள பகுதியைச் சேர்ந்த பி.ஏ. குலதுங்க (வயது-32) என்பவரே பலியானவராவார்

மோட்டார் சைக்கிளில் பொலிஸ் நிலையத்திலிருந்து புறப்பட்ட வேளை கண்டி வீதியூடாக வந்த இராணுவ டிரக் மோதியதாலேயே இப் பொலிசார் பலியானார்.

## போட்டிகள்

(அளவெட்டி செய்தியாளர்)

எதிர்வரும் யூன் 6இல் நடைபெறவுள்ள தமிழீழ மாணவர் எழுச்சிநாளை முன்னிட்டு தமிழீழ மாணவர் அமைப்பினர் பாடசாலை மட்டத்தில் கட்டுரை மற்றும் ஓவியப்போட்டிகளை நடத்தவுள்ளனர்.

தமிழீழ தேசிய உருவாக்கத்தில் மாணவர்களின் பங்களிப்பு, எதிர்கால தமிழீழ பொருண்மியம், நவீன அறிவியல் வளர்ச்சியில் எமது எதிர்காலம் போன்ற தலைப்புக்களில் பிரிவு ரீதியாக கட்டுரை மற்றும் ஓவியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன என மாணவர்அமைப்பின் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(லோ)

# புயலால் பாதிப்பு

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முதல் கடும் புயற்காற்று வீசியது. இது காலைவரை நீடித்தது.இதனால் மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. காரைதீவு நிந்தவூர், சம்மாந்துறை கல்முனைக்குடி, சாய்ந்தமருது ஆகிய பகுதிகளில் கடும் காற்று வீசியதுடன் காலை கடல் கொந்தளிப்பு அதிகமாயிருந்ததாகத் தெரியவருகின்றது.


அத்துடன் இரண்டு நாட்களுக்கு முன்னர் திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டத்தில் வீசிய புயற்காற்றுக் காரணமாக வீடுகளுக்குச் சேதம் ஏற்பட்டதுடன் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# படையிலிருந்து தலைமறைவு!

மட்டக்களப்பு கிரான் சிறிலங்கா இராணுவ முகாமைச் சேர்ந்த இரு இராணுவத்தினர் காணாமல் போயுள்ளனர்.

கடந்த 9-ம் திகதி முதல் இவர்கள் காணாமல் போயுள்ளதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணைகளை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு மேற்கொண்டுள்ளது.

இவ்விரு இராணுவத்தினரும் விடுதலைப்புலிகளிடம் சரணடைந்திருக்கக் கூடும் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.





## சிந்தனைக்கு

எமது தாயக மண்ணில், வரலாற்று ரீதியாக எமக்கு உரித்தான எமது சொந்த மண்ணில், நாம் நிம்மதியாக, சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதே எமது குறிக்கோள். இதுவே எமது தேசத்தின் அபிலாசை.

- தமிழீழத் தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 15-05-2003

## காலத்தின் தேவை!

வடக்கு-கிழக்கை கட்டி எழுப்புவதற்கும், மக்களின் இயல்பு வாழ்க்கையில் சகஜ நிலையை ஏற்படுத்துவதற்குமாய் நிர்வாக ரீதியாகவும், நிதி ரீதியாகவும் மற்றும் வேண்டிய துறைகளிலும் போதிய அதிகாரங்களுடன் கூடிய கட்டமைப்பொன்று உருவாக்கப்படுதலின் அவசியம் தமிழ் மக்கள் தரப்பால் தற்பொழுது உணரப்பட்டதொன்றாகியுள்ளது. இதனை விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் தம்மைச் சந்தித்த தமிழ் தேசியக் கூட்டமைப்பினரிடம் தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசிற்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்ட வேளையில் - அதாவது தாய்லாந்தில் இடம்பெற்ற முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தையின் போது வடக்கு-கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் தொடர்பாகப் பேசப்பட்டபோதும், உருவாகக்கூடிய அரசியல்யாப்பு நெருக்கடிகள் காரணமாகவும் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகள் அடிப்படையிலும், இவ்விடயம் கைவிடப்பட்டு, உபகுழுக்களை அமைப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால், உபகுழுக்கள் எதிர்பார்த்த அளவில் பிரச்சினைகளுக்கும், நெருக்கடிகளுக்கும் தீர்வு காணத் தவறிவிட்டன. குறிப்பாக, மக்களின் இயல்பு வாழ்க்கையைத் தோற்றுவிப்பதற்கான விடயத்தில் இவை தோல்வியைத் தழுவிக் கொண்டு விட்டன. எடுத்துக்காட்டாக, உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான சிக்கலைத் தீர்ப்பதில் பாதுகாப்பு உபகுழுவும், மக்களின் புனர்வாழ்வு - புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதில் சிரான் அமைப்பும் தமது இலக்கை நோக்கி முன்னேறிச் செல்ல முடியவில்லை.

இதற்கு அரசாங்கத்தரப்பு இவ்விடயத்தில் தீவிரமான செயற்பாடுகளை மேற்கொள்ளாமையும், அரசாங்கத் தரப்பு சில நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத பலவீனமான நிலையில் உள்ளமையும்கூட காரணமாகும். அதாவது, உபகுழுக்களின் சட்ட அங்கீகாரங்கள் குறித்து எழுந்துள்ள சிக்கல்களும், ஆளும் கட்சிக்கும் - சனாதிபதிக்கும் இடையிலான அதிகாரப் போட்டியும் இவ் உபகுழுக்களின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டையாக எழுந்துள்ளன.

உடனடி மனிதாபிமானப் பணிகளுக்கான உபகுழு (சிரான்) மக்களின் உடனடி மற்றும் அத்தியாவசிய தேவைகள் என்பனவற்றை இனங்கண்டுள்ள போதும் அதனிடம் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான போதிய நிதி வளமோ அன்றி அதிகாரப் பலமோ இருப்பதாக இல்லை. இதன் காரணமாக மிகவும் பரபரப்பாக ஆரம்பிக்கப்பட்ட சிரான் பணிகள் ஒரு தேக்க நிலையை அடைந்துள்ளது என்றே கூறலாம். இதற்கு சிரான் அமைப்பு நிதி வளங்களைக் கையாள்வதற்கான சட்ட அங்கீகாரத்தைக் கொண்டிராமையே காரணமாகும். அதற்கு மாறாக, அரசாங்கம் இவ்விடயத்தில் தீவர அக்கறை கொண்டதாக இருந்திருப்பின் இத்தகையதொரு நிலை உருவாகியிருக்கமாட்டாது.

சிரான் அமைப்பு உருவாக்கப்பட்டபோது அது வடக்கு - கிழக்கில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்வதனால் அதற்கான சட்ட அங்கீகாரம் அவசியமானதொன்று என்பது அரசாங்கத்திற்குத் தெரியாததொன்றல்ல. ஆனால், அரசாங்கம் அதற்கான எத்தகைய மாற்று ஏற்பட்டையும் பரிசீலித்ததாக இல்லை. மாறாக, காலம் கடத்துவதையே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டது போன்று அதன் செயற்பாடுகள் இருந்தது.

அதிலும் குறிப்பாகச் சர்வதேச நாடுகள் சிறிதளவிலேனும் வடக்கு - கிழக்கிற்கு உதவ முன்வந்துள்ளபோதும் அரசாங்கம் சிரான் அமைப்பு நிதி வளத்தினைக் கையாள்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளத் தவறியமையானது அரசாங்கத்தின் சமாதானம் மீதான செயற்பாடுகளையே கேள்விக்குள்ளாக்கும் ஒன்றாகியுள்ளது.

சிறிலங்கா அரசியல்வாதிகளும் சரி, உயர் நிர்வாக அதிகாரிகளும் சரி வடக்கு - கிழக்கு புனர்வாழ்விற்கென தனியாக நிதி ஒதுக்கப்படுவதையோ/பெறப்படுவதையோ/ கையாள்வதையோ பொதுவில் அவர்கள் விரும்பியதாக இல்லை. இதனால், சிரான் அமைப்பு உருவாக்கப்பட்டத்தில் இருந்து சில நாடுகள் வடக்கு - கிழக்கு புனர்வாழ்விற்கு நிதி ஒதுக்க முன்வந்தது வரையில் அதற்கு அனுசரணையான நிலைப்பாட்டை வெளிப்படுத்த அவர்கள் தயாராக இருக்கவில்லை.

இவற்றின் காரணமாகவே, சிரான் அமைப்பின் செயற்பாடுகள் மந்தமானதொரு கட்டத்தை அடைந்தது. ஆகையினால், வடக்கு - கிழக்கின் புனர்வாழ்வுப் பணிகள் முனைப்புப்பெற வேண்டும் எனின், வடக்கு - கிழக்கிற்கென நிர்வாக, நிதி விவகாரங்களைக் கையாள்வதற்கென போதிய அதிகாரங்களுடன் கூடிய கட்டமைப்பு ஒன்றின் தேவை கட்டாயமானதாகியுள்ளது. ஒருவகையில், அரசாங்கத்தின் உறுதியான செயற்பாடு அற்றதன் விளைவாகவே இத்தகையதொரு நிலை உருவாகியுள்ளது.

இத்தகையதொரு அமைப்பு உருவாக்கப்படாத பட்சத்தில் வடக்கு- கிழக்கு புனர்வாழ்வுப் பணிகள் உள்ளிட்ட தமிழ் மக்களின் தேவைகள் எவையும் நிறைவு செய்யப்படுவதோ, யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மீண்டு அவர்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதோ சாத்தியப்பாடானதொன்றாக இருக்கமாட்டாது. அதேபோன்றே அமுலாக்கத்திற்கான அதிகாரங்கள் எதுவுமற்ற அமைப்புக்களையும், வாக்குறுதிகளையும் ஏற்றுக் கொண்டு சிறிலங்கா அரசுடன் பேச்சுக்களை நடத்துவதினால்கூட இனப்பிரச்சினைக்குத் தீர்வோ அன்றி முடிவோ ஏற்பட்டுவிடப் போவதில்லை.

# ரத்வத்தவின் புதல்வர்கள் படுகொலையில் நேரில் பங்கேற்றதை நான் கண்டேன்!

### -சம்பவ இடத்தில் காயமடைந்தவர் சாட்சியம்

(கொழும்பு)

உடத்தலவின்ன கொலை இடம்பெற்ற வேளையில் லொகான் மற்றும் சானுக ரத்வத்த ஆகியோர் இச் சம்பவத்துடன் தொடர்புபட்டிருந்ததை தான் நேரில் கண்டதாக சாட்சியாளர் ஒருவர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மூன்று நபர் கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழு முன்னிலையில் முகமத் அப்துல் மலிக் என்பவர் நேற்று முன்தினம் சாட்சியம் அளிக்கும் போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்; கடந்த பொதுத் தேர்தல் அன்று வாக்கெடுப்பு முடிவடைந்த பின்னர் வாக்குப் பெட்டிகளைக் கொண்டு சென்ற பேருந்து வண்டிக்குப் பின் சென்ற சிலரில் நானும் இருந்தேன். வான் வண்டியை நெருங்கியவுடன் குறுக்கு வீதி ஒன்றுக்கு திரும்பி அதனைத் தொடர்ந்து இரண்டு டிபெண்டர் வண்டிகளில் வந்த ஆயுதம் தரித்த நபர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு எமது வானைத் துரத்தி வந்தனர்.

இதனால் வான் கட்டுப்படுத்த முடியாது மின்கம்பம் ஒன்றுடன் மோதியது. எமக்கு பின் வந்துகொண்டிருந்த டிபெண்டர் வகையைச் சேர்ந்த இரண்டு வண்டிகளும் வானை மறித்து நின்றன.

அவ்வண்டிகளிலிருந்து வெளியே வந்த ஆயுதம் தரித்த எட்டு நபர்கள் எங்கள் மீது தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இவ்வழக்கின் மூன்றாவது பிரதிவாதியான சானுக ரத்தவத்த நான் பயணித்த வானின் முன் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டார்.

டிபெண்டர் வண்டிகளில் வந்த ஆயுதம் தரித்த நபர்கள் தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமையினால் வானிலிருந்தோர் கீழே வீழ்ந்ததை நான் நேரில் கண்டேன்.

அவ்வேளையில் இரண்டாவது பிரதிவாதியான லொகான் ரத்வத்த வான் மீது குண்டுகளை வீசுமாறு உத்தரவிட்டபோது ஒரு நபர் வான் மீது குண்டு வீசினார்.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் கழுத்திலும், காலிலும் காயமடைந்தவாறு வானுக்குள் நான் இருந்தேன் என்றும் அவர் கூறினார். இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் கொழும்பு மேல் நீதிமன்ற வளாகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மூன்று வாகனங்களையும் சாட்சி அடையாளம் காட்டியுள்ளார்.

மேலதிக விசாரணைகள் எதிர் வரும் திங்கட்கிழமை வரை பிற்போடப்பட்டுள்ளது.

# எவ்வகையான தடைகள் வந்தாலும் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்

### -சிறிலங்கா சனாதிபதி கூறுகிறார்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை எத்தகைய தடைகள் வந்தாலும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு இரு நாள் விஜயம் மேற்கொண்ட அமெரிக்க உதவி வெளிநாட்டமைச்சர் கிறிஸ்ரினா றொக்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார். இதில் இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள் குறித்துப் பேசப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்தச் சந்திப்பின் போது அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களுக்குத் தடைகள் வரக்கூடாது என்றும் எத்தகைய தடைகள் வந்தாலும் பேச்சுவார்த்தை மூலம் அவற்றை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்றும் சனாதிபதி அப்போது குறிப்பிட்டுள்ளார்.

# தனியார் நிறுவன வேலை வாய்ப்புக்கு 25700 பட்டதாரிகள் விண்ணப்பம்!

(கொழும்பு)

அரசாங்கத்தின் தருணா அருணாபட்டதாரிகள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலையற்ற பட்டதாரிகளுக்கு தனியார் நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுக் கொடுக்கப்படவுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளில் தொழில் வாய்ப்பு அமைச்சில் பதிவு செய்தவர்களில் 18000 உள்வாரிப் பட்டதாரிகளும், 7700 வெளிவாரிப் பட்டதாரிகளும் அடங்குவார்கள்.

தொழில் வேலை வாய்ப்பு அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள உலக வங்கி பயிற்சித் திட்டத்தின் கீழ் இவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் 01 வருடம் தொழில் துறைசார் பயிற்சிகள் வழங்கப்படும்.

பயிற்சியின் போது ஒரு பட்டதாரிக்குத் தருணா அருணாவின் நிதியில் இருந்து மாதம் 4000 ரூபா நன்கொடையாக வழங்கப்படும்.

பயிற்சி முடிவடைந்தவுடன் இவர்கள் பயிற்சி பெற்ற நிறுவனங்களிலேயே வேலைக்கு அமர்த்தப்படவுள்ளனர்.

# இறுதி டெஸ்டில் அவுஸ்திரேலியாவை மேற்கிந்திய அணி வீழ்த்தியது



அவுஸ்திரேலியாவிற்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 03 விக்கெட்டுக்களால் சிறப்புமிக்க வெற்றியொன்றை ஈட்டியுள்ளது.

டெஸ்ட் போட்டி ஒன்றில் நான்காவது இனிங்சில் அதி கூடிய ஓட்டங்களைப் பெற்ற நாடு என்ற பெருமையை மேற்கிந்தியத் தீவுகள் அணி தனதாக்கிக் கொண்டது. இதற்கு முன்னர் 1976ம் ஆண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக இந்திய அணி 04 விக்கெட் இழப்பிற்கு 406 ஓட்டங்களைப் பெற்று ஈட்டிய வெற்றி நான்காவது இனிங்சில் அதி கூடிய வெற்றி இலக்காக அமைந்திருந்தது. அவுஸ்திரேலியா நான்காவது போட்டியில் தோல்வியைத் தழுவிய போதும் இரு அணிகளுக்கும் இடையிலான 04 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலியா 03-01 என்ற அடிப்படையில் தனதாக்கிக் கொண்டது.

நான்காவது டெஸ்டில் அவுஸ்திரேலியாவும் மேற்கிந்தியத்தீவும் முதலாவது இனிங்சில் தலா 240 ஓட்டங்களைப் பெற்றிருந்தன.

அவுஸ்திரேலியா அதன் இரண்டாவது இனிங்சில் 417 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. மேற்கிந்தியத்தீவு இரண்டாவது இனிங்சில் 07 விக்கெட்டுக்களை இழந்து 418 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இந்த டெஸ்ட் போட்டியில் ஆட்ட நாயகனாக சந்திரபோல் தெரிவு செய்யப்பட்டதுடன் போட்டித் தொடரின் ஆட்டநாயகனாக றிக்கி பொண்டிங் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



# டென்னிஸ் தரவரிசையில் செரினாவுக்கு முதலிடம்!

உலக டென்னிஸ் வீராங்கனைகளின் தர வரிசைப் பட்டியலை சர்வதேசப் பெண்கள் டென்னிஸ் சங்கம் வெளியிட்டுள்ளது. அமெரிக்க வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார்.

ஜேர்மன் ஓபன் இறுதிப் போட்டியில் கிம்கிளிஸ்டர்ஸ் (பெல்ஜியம்) வீனஸ் வில்லியம்சை பின்னுக்குத் தள்ளிவிட்டு இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளார்.

விளையாட்டு செய்திகள்

# பேதங்களை மறந்து பணியாற்ற சனாதிபதியும், பிரதமரும் முன்வர வேண்டும்!

## கத்தோலிக்க ஆயர் சம்மேளனம் வேண்டுகோள்

சனாதிபதியும், பிரதமரும் தமது வேறுபாடுகளை மறந்து பொதுமக்களுக்காக ஒன்றாகப் பணியாற்ற வேண்டுமென கத்தோலிக்க ஆயர்மார் சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது சகாக்களின் ஆட்சேபம் இருந்தாலும் பொதுநலம் கருதி இருவரும் ஊக்கத்துடன் பொதுநலனுக்காக பாடுபட வேண்டிய காலம் கனிந்துவிட்டது என அவ் அமைப்பு அறிக்கை விடுத்துள்ளது. தற்போதைய அரசியல் நெருக்கடிகள் குறித்து தாம் பெரிதும் அதிர்ச்சி அடைவதாக ஆயர்மார் கூறியுள்ளனர். அபிவிருத்தி லொத்தர் சபை குறித்த சர்ச்சைகளின் காரணமாக சமாதான முயற்சிகள் சீர்குலைந்து விடலாம் என்ற அச்சம் அதிகரித்துள்ளதாக ஆயர்மார் சம்மேளனம் சுட்டிக் காட்டியுள்ளது. சனாதிபதியும், பிரதமரும் தத்தமது நிலைப்பாடுகளிலிருந்து விலகினால் அது மக்களின் நம்பிக்கைக்கு துரோகம் செய்வதாக அமைந்துவிடும். எனவே தமது பொறுப்புக்களின் பெருமையை உணர்ந்து குறுகிய அரசியல் பேதங்களை கைவிட வேண்டுமென அவ் அறிக்கை மேலும் கூறுகின்றது. தலைவர்கள் இருவரும் பொதுமக்களின் நலனுக்காக தியாகங்களை மேற்கொள்வார்கள் என தாம் நம்புவதாக மேலும் கூறியுள்ளனர்.

## - களுத்துறைச் சிறைச்சாலையில் -
# மூன்று தமிழ்க் கைதிகள் கூரைமீதேறி உண்ணாவிரதம்

களுத்துறைச் சிறைச்சாலையில் நீண்ட நாட்களாகச் சிறையிலிருக்கும் மூன்று தமிழ் அரசியல் கைதிகள் நேற்று உண்ணாவிரதம் இருக்க ஆரம்பித்துள்ளார்கள்.

தம்மை நிபந்தனையின்றி விடுவிக்க வேண்டும், நீதிமன்றத்தில் நிறுத்தப்படக் கூடாது என்ற நிபந்தனைகளை முன்வைத்து இம்மூன்று பேரும் உண்ணாவிரதத்தை ஆரம்பித்துள்ளனர். சிறைச்சாலைக் கூரையில் நின்று உண்ணாவிரதம் இருக்கும் இம் மூவரும் பிரதம நீதியரசரும், சட்டமா அதிபரும் தமது நிலைமையை நேரில் வந்து பார்த்து முடிவு எடுக்க வேண்டும் எனக் கூறியுள்ளனர்.

தமக்கு உணவு சிகிச்சை வழங்கக் கூடாது என அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். இவர்களில் ஒருவர் 1995ஆம் ஆண்டு கொழும்பிலும், மற்றையவர் 1998ஆம் ஆண்டு அம்பாறை பாண்டிருப்பிலும், மூன்றாமவர் 2000ஆம் ஆண்டு மட்டக்களப்பு இருதயபுரத்திலும் சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## - கடும் மழை, வெள்ளம், காற்று -
# மோசமான வானிலையால் 5 க்கு மேற்பட்டோர் மரணம்

(கொழும்பு)

இலங்கையின் பல பாகங்களிலும் கடும் மழை, வெள்ளம் மற்றும் சூறாவளி ஆகியவற்றின் காரணமாகக் குறைந்தது 5 பேர் கொல்லப்பட்டதோடு 7500க்கு மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்பிற்குள்ளாகின.

கொழும்பு, களுத்துறை, மட்டக்களப்பு, திருகோணமலை இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் மோசமான பாதிப்பிற்குள்ளாகியுள்ளன. கொழும்பில் 50 க்கு மேற்பட்ட மரங்கள் கட்டடங்கள், வாகனங்கள் வீதிகள் என்பன மீது வீழ்ந்துள்ளன. இதனால் பல மணிநேரம் வீதிப் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டிருந்தன.

இம்மோசமான வானிலை காரணமாக 10க்கு மேற்பட்ட வாகனங்களும் சேதமடைந்துள்ளன.

## - அபிவிருத்தி லொத்தர் சபை சுவீகரிப்பு -
# பிரதமர் ரணிலின் கருத்துக்கள் சனாதிபதி சந்திரிகாவால் நிராகரிப்பு!

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபை பொறுப்பேற்கப்பட்டமை தொடர்பாகப் பிரதம மந்திரி முன்வைத்துள்ள கருத்துக்களை ஏற்றுக்கொள்ள முடியாது என சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

கடந்த 09ஆம் திகதி பிரதமர் அனுப்பிய கடிதத்திற்கு பதிலளிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அரசியல் யாப்பின் 44 ஆவது ஷரத்தின் முதலாவது பிரிவின்படி அமைச்சர்களது விடயங்களையும், பொறுப்புக்களையும் ஒதுக்குவது தொடர்பாக சனாதிபதி நடவடிக்கை எடுக்கும் சந்தர்ப்பத்தில், சனாதிபதி அவசியம் எனக் கருதும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே பிரதம மந்திரியின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் அவசியம் பற்றி தாமே முடிவு செய்வதாகத் தெரிவித்துள்ளார். அரசியல் யாப்பு மாற்றம் எதுவுமின்றி அரசியல் யாப்பு மூலம் சனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை எவ்வகையிலும் குறைக்க இயலாது. இதுபற்றி 19 வது அரசியல் யாப்பு திருத்தச் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபை சட்டத்தைத் திருத்துவது தொடர்பாக எந்தவொரு யோசனையையும் அமைச்சரவை ஏற்றுக் கொள்ளவில்லையென பிரதமரது கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். ஆயினும் அபிவிருத்தி லொத்தர் சபையின் நிதி சனாதிபதி நிதியத்திற்கு கிடைப்பதைத் தடுப்பதற்கு முயற்சி செய்தவர்களின் விபரத்தை ரணில் குறிப்பிடவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அச்சகத்தில் இடம்பெற்ற ... வம் தொடர்பாக உடனடியாக பக்கச் சார்பற்ற விசாரணை நடத்துமாறு சனாதிபதி பிரதமரைக் கேட்டுள்ளார். இவ்வாறான நடவடிக்கையில் அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான தனது தீர்மானத்தை மீள் பரிசீலனை செய்ய முடியாது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இத்தீர்மானம் பற்றி வர்த்தமானியில் வெளியிடுமாறு அச்சகத்திற்கு அனுப்பிய கடிதம் பிரசுரமாவது சட்ட விரோதமான முறையில் தடுக்கப்பட்டுள்ள போதிலும் அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பான தமது தீர்மானம் மாற்றமின்றிச் செயற்படும் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## நேர்முகத் தேர்வு ஒத்திவைப்பு!

கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் எதிர்வரும் சனிக்கிழமை (17ஆம் திகதி) நடைபெறவிருந்த ஒப்பந்த அடிப்படையிலான சாரதிகளுக்கான நேர்முகத் தேர்வு தவிர்க்கமுடியாத காரணத்தினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும் என கிளிநொச்சி சுகாதாரப் பணிமனையினர் தெரிவித்துள்ளனர்.

## - குடிமனைகளுக்கு அருகில் கொட்டப்பட்ட -
# கழிவுப் பொருட்களை உடன் அகற்றப் பணிப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி 156ஆம் கட்டைப் பகுதியில் அமைந்துள்ள குடிமனைகளின் அருகில் கொட்டப்பட்டுள்ள கழிவுப் பொருட்களை உடனடியாக அகற்றுமாறு கரைச்சிப் பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன். நித்தியானந்தன் உத்தரவிட்டுள்ளார்.

நேற்றுக் காலை விசேட ஆணையாளர் மற்றும் நிர்வாக சேவை பிரதிநிதிகள் ஆகியோர் கொண்ட குழுவினர் மேற்படி இடத்தைச் சென்று பார்வையிட்டு அப்பகுதி மக்களுடன் உரையாடிய பின்னர் சுகாதார நிலைமைகளைக் கருத்திற் கொண்டு ஒரு வாரங்களுக்குள் இதனை அகற்றுமாறு உத்தரவிட்டுள்ளனர்.

இவ்விடத்தில் கழிவுப் பொருட்கள் கொட்டப்பட்டுள்ளமையினால் எழுந்துள்ள சுகாதாரச் சீர்கேடு குறித்து சுட்டிக்காட்டப்பட்ட நிலையிலேயே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ)

## மழைவிலை...

ர்பாகவே நேற்று இத்தீர்ப்பளிக்கப்பட்டது.

இத்தீர்ப்பு மேல்நீதிமன்ற நீதியாளர் இ.கலையரசி அவர்களினால் வழங்கப்பட்டது.

## அரசு-புலிகள்...

அமெரிக்கா உறுதியான நிலைப்பாட்டை எடுத்திருப்பதையிட்டு தனது பாராட்டுக்களையும் சனாதிபதி தெரிவித்துள்ளார்.

இவற்றைவிட 2001-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் பொ.ஐ.மு தொண்டர்கள் ஆதரவாளர்களுக்கு எதிரான தாக்குதல், தீவைப்பு ஆகியன தொடர்பான சம்பவங்கள் தொடர்பாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆன்மீகப் பெருவிழா

(வவுனியா)

வவுனியா, மன்னார் மாவட்டங்கள் இணைந்து நடாத்தும் மாபெரும் ஆன்மீக பெருவிழா நேற்று வவுனியாவில் மிகவும் சிறப்பாக ஆரம்பமாகியுள்ளது.

இவ் விழா இன்றும் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ர)

## தாய்லாந்துப்...

தெரியவருகிறது.

இலங்கையில் தற்போது நிலவும் அசாதாரணமான காலநிலை காரணமாகவே இந்த விஜயம் பிற்போடப்பட்டுள்ளது. இந்த விஜயம் யூன் அல்லது யூலை மாதத்தில் திட்டமிடப்படலாம் எனத் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

## சனாதிபதி-பிரதமர்...

லும் பாதிக்கக் கூடாது.

ஜப்பானில் நடைபெறும் உதவி வழங்கும் மாநாட்டில் புலிகள் கலந்து கொள்ளவேண்டும் என்பதே அமெரிக்காவின் பிரதான எதிர்பார்ப்பாக இருக்கின்றது.

அரசியல் பிரச்சினையை ஒரு புறம் தள்ளிவைத்து விட்டு சமாதான நடவடிக்கைகள் வெற்றிபெறச் செய்வதற்கு இலங்கையின் சகல தரப்பினரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றுவார்கள் என நம்புகின்றேன்.

அந்நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் சகல கட்சிகளும் செயலாற்ற வேண்டும்.

இலங்கையில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அமெரிக்காவின் அர்ப்பணிப்பையும், பூரண ஆதரவையும் வழங்குகின்றோம் என்று அவர் கூறினார்.

## 'சார்ஸ்'...

ஜேர்மன் ஆகிய நாடுகளில் இருந்து உறவினர்கள் வந்து தங்கிச் சென்றுள்ளனர்.

2003 ஆரம்பத்தில் இருந்து உலக நாடுகளில் பல பகுதிகளில் இருந்தும் இச் 'சார்ஸ்' நோயினால் பலர் இறந்தும் பெருந்தொகையினர் நோய்த் தாக்கத்திற்கு உட்பட்டமை தொடர்பாகவும் பத்திரிகை, வானொலிச் செய்தி, துண்டுப் பிரசுரங்கள் ஊடாகவும் அறியத்தந்தமையுடன் இந் நோய்க்கான வருமுன் காக்கும் சுகாதார நடைமுறைகள் தொடர்பாகவும் அறியத்தந்துள்ளோம். இந் நடைமுறைகளைக் கடைப்பிடிப்பதுடன் இந் நோய் வேகமாகப் பரவி வருவதால் இக் காலப் பகுதியில் அவசிய தேவையின்றி வைத்தியசாலை செல்வதைத் தவிர்ப்பதுடன் குறிப்பாக சுவாசவழித் தொற்று நோய்களுக்கு சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்க்கச் செல்வதோ, நெருங்கிப் பழகுவதை தவிர்ப்பதுடன் காய்ச்சல், இருமல், தடிமன், உடற்குத்துவலி, அலுப்பு போன்ற சுவாசவழி தொற்று நோய்களுக்கான அறிகுறிகளுடன் காணப்படின் அரச வைத்தியசாலை சென்று பூரண வைத்திய ஆலோசனையைப் பெற்று சிகிச்சை பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## பொதுத்தேர்...

கங்களை அனுப்பி வைத்துள்ளதாகவும், எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலர் மைத்திரிபால சிறிசேன தெற்கிலிருந்து நாடுதழுவிய பிரச்சாரத்தை ஆரம்பித்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சார்ஸ் அறிகுறி...

யில் இறந்தவர் தொடர்பான விபரங்கள் கொழும்பிலுள்ள சுகாதார திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் எஸ்.சதுர்முகம் தெரிவித்தார்.

அத்தோடு, கனடாவில் இருந்து வந்த உறவினர் ஒருவரினால்தான் இந்த நோயாளி இறக்க நேரிட்டது என்ற கருத்தையும் அவர் நிராகரித்துள்ளார்.

அதேசமயம், இறந்தவரின் சடலம் உறவினரிடம் கையளிக்க மருத்துவமனை நிர்வாகம் மறுத்து விட்டதாகத் தெரியவருகிறது.

## வர்த்தமானி...

திங்கள் மாலை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையில் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு சட்டமா அதிபரின் ஆலோசனையை எதிர்பார்த்திருப்பதாக அமைச்சர் சனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

## நோர்வே வெளிவிவ...

சலிஸ்பாக், கொழும்பிற்கான நோர்வே உயர் ஸ்தானிகர் கன்ஸ்பீக்கர், இரண்டாவது காரியதரிசி ரொம்ஸ் ரன்கிஸன் ஆகியோர் கலந்துகொள்வர் எனத், தெரியவருகின்றது.

இதேவேளை, இச்சந்திப்பானது சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பதற்கும், டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகளைப் பங்குபற்ற வைப்பதற்குமான நோர்வே அரசின் உயர் மட்டத்திலான முயற்சியாக இருக்கும் என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே கொழும்பில் சிறிலங்காப் பிரதமரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்திவிட்டு கிளிநொச்சி வரும் நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர், தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களைச் சந்தித்த பின்னர் மீண்டும் ஒரு தடவை பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவைச் சந்தித்து புலிகளுடனான சந்திப்புக் குறித்துப் பேசுவார் எனவும் தெரிவிக்கின்றனர்.

## பதின்நான்காம் ஆண்டின் நினைவில்

தாயின் மடியில்

02 - 02 - 1961

தாயக மண்ணில்

15 - 05 - 1989





### லெப்.கேணல் நவம் (டடி)

(செல்லப்பெருமாள் அருமைராசா)

தளராத மனத்தோடு எழுந்த புலிவீரனே - எம்
தலைவனைக்காத்திட்ட பெரும் தளபதியே
தூழ்ப்போது செயற்பட்ட நவம் அண்ணாவே - உன்
பெயரில் உதித்த நவம் அறிவுக்கூடம்
உன்கனவு சுமந்து பணி தொடர்கிறது.

லெப்.கேணல் நவம் அறிவுக்கூடம்
போராளிகள், பணியாளர்கள்.

(3264)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மே. மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.